செய்தி வெளியீடு எண்.02-2016 நாள்: 01.07.2016

விழுப்புரம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம், பழங்குடியின இனத்தவர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கு 30 இலவச வீடு மற்றும் 100 கறவை பசுக்கள் வழங்க அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.ல**க்ஷ்**மி,இ.ஆ.ப. அவர்கள் அறிவிப்பு.

******

தமிழ்நாடு பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றத்திற்காக மத்திய அரசால் **2013-2014** ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது தொடர்பாக விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்களின் அறிவிப்பு.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழக அரசு **2013-2014** ஆம் ஆண்டிற்கு ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் 30 இலவச வீடு மற்றும் 100 இலவச கறவை மாடுகள் வழங்கிட மொத்தம் **ரூ.109.40 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் தகுதி வாய்ந்த **பழங்குடியின இருளர் மற்றும் காட்டு நாயக்கன்** இன மக்கள் இலவச வீடு மற்றும் கறவை மாடுகள் பெற்றிட சம்மந்தப்பட்ட அந்தந்த வட்டங்களைச் சேர்ந்த தனி வட்டாட்சியரிடம் (ஆதிதிராவிடர் நலம்) விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.ல**க்ஷ்**மி,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.